கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,
பெரியகுளம்

வழக்கு எண் MCOP No. 181/2023

நாள்: 10.06.2026

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

(ம.சா. 2 சரவணன் முன்னிலையானார். மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை)

வழக்கு சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். விபத்தில் இறந்து போன மணி என்பவர் என்னுடன் சேர்ந்து பயணம் செய்யவில்லை. அவர் எனக்கு முன்னால் பயணம் செய்தார். நான் வேறு ஒரு வாகனத்தில் அவருக்கு பின்னால் பயணம் செய்தேன். விபத்து நடந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. தீபாவளி சமயத்தில் விபத்து நடந்தது. நேரம் சுமார் இரவு 07.15 மணி இருக்கும். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியவில்லை.

விபத்து நடந்த ரோடு கம்பத்திலிருந்து தேனி செல்லும் ரோடு ஆகும். நாங்கள் விபத்து சமயத்தில் கம்பத்திலிருந்து தேனி நோக்கி இரண்டு வாகனங்களில் தனித்தனியாக வந்து கொண்டிருந்தோம். கம்பத்திலிருந்து தேனி நோக்கி வரக்கூடிய ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். நான் சாலையில் பயணம் செய்து கொண்டிருந்த போது எங்களுக்கு முன்னாலோ பின்னாலோ வேறு வாகனங்கள் வந்த கொண்டிருந்ததா என்றால் நான் சரியாக பார்க்கவில்லை. இரவு நேரம் என்பதால் நான் விபத்தை சரியாக பார்க்கவில்லை என்றான் சரியல்ல. நான் விபத்து நடந்த இடத்திலிருந்து 15 அடி தொலைவில் வந்து கொண்டிருந்தேன். விபத்து சமயத்தில் இறந்த போன மணி என்பவரும் நானும் மது போதையில் வாகனத்தை ஓட்டி

வந்தோம் என்றும் அதன் விளைவாக தான் விபத்து ஏற்பட்டது என்றும்ன சொன்னால் சரியல்ல.

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து நடந்த சமயத்தில் நான் டிரைவராக வேலை செய்து வந்தேன். விபத்தில் இறந்து போன நபர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபர் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த ரோடு தென்வடல் ரோடு என்றும் எந்த பகுதியில் விபத்து நடந்தது என்றும் கேட்டால் நாங்கள் வந்த சாலையின் இடது பக்கம் விபத்து ஏற்பட்டது. 2 ஆம் எதிர்மனுதார்களிடமிருந்து அதிக நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக இறந்த போன மணிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விபத்திற்கு காரணம் இறந்து போன மணி மது போதையில் இருந்ததாலும் அதி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ரோட்டில் வாகனங்களை கவனிக்காமல் ஓட்டி சென்றதாலேயே விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் இறந்து போன மணி என்பதால் 2 ஆம் எதிர்மனுதாரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C.Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.